பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

14 06 2025 12 40

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி அரசுமுறைப் பயணமாக சைப்ரஸ், கனடா, குரேஷியா ஆகிய நாடுகளுக்கு நாளை புறப்பட்டுச் செல்கிறார்.

2. நாடு விரைவான பொருளாதார வளர்ச்சிக் கண்டு வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. அகமதாபாத் விமான விபத்து குறித்து விசாரணை நடத்துவதற்காக பல்துறை உயர்நிலைக் குழு ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

4. இஸ்ரேல் - ஈரான் இடையேயான மோதல் குறித்து விவாதிப்பதற்காக ஐநா பாதுகாப்புக் குழுவின் அவசர கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

5. ஆசிய பாரா படகு சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், 4 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

பிரதமர் திரு நரேந்திர மோடி அரசுமுறைப் பயணமாக சைப்ரஸ், கனடா, குரேஷியா ஆகிய நாடுகளுக்கு நாளை புறப்பட்டுச் செல்கிறார்.

முதற்கட்டமாக நாளையும், நாளை மறுநாளும் சைப்ரஸ் செல்லும் பிரதமர் பின்னர் ஜி7 உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக கனடா செல்கிறார்.

இதனைத் தொடர்ந்து வரும் 18 ஆம் தேதி பிரதமர் குரேஷியா செல்லவுள்ளதாக மத்திய அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

>><><><<

நாடு விரைவான பொருளாதார வளர்ச்சிக் கண்டு வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர் மத்திய அரசு கடந்த 11 ஆண்டுகளாக மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக பொருளாதார அடிப்படை கட்டமைப்புகள் வலுவாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

நிதித்துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகள் இதற்கு காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

டிஜிட்டல் பண பரிவர்த்தனையில் இந்தியா முன்னணியில் திகழ்வதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

>><><><<

அகமதாபாத்தில் நேரிட்ட விமான விபத்து குறித்து விசாரணை நடத்துவதற்காக பல்துறை உயர்நிலைக் குழு ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

விபத்துக்கான காரணங்கள் குறித்தும் எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துக்களை தவிர்ப்பதற்கான நடைமுறை குறித்தும் இந்தக் குழு ஆலோசனை மேற்கொண்டு பரிந்துரைகளை சமர்ப்பிக்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

உள்துறை செயலர் தலைமையிலான இந்த குழுவில் சம்பந்தப்பட்ட துறைகளின் உயரதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

இதற்கிடையே, விமான விபத்தில் உயிரிழந்தோரின் உடலை அடையாளம் காணும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதற்காக அவர்களின் உறவினர்களின் மரபணு மாதிரிகளை சேகரிக்கும் பணியும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாநில அமைச்சர் திரு ஹர்ஷ் சங்க்வி இப்பணிகளை இன்று ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து விமான விபத்து நடந்த இடத்தையும் அமைச்சர் பார்வையிட்டார்.

மீட்புப்பணிகளில் தேசிய பாதுகாப்புப் படையினரும், இணைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிலையில் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தலைமையில் பாதுகாப்பான விமானப் பயணம் குறித்த உயர்நிலைக் குழு கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

>><><><<

ஆபரேஷன் சிந்தூர் நமது விமானப்படையின் வலிமையை எடுத்துரைத்துள்ளதாக ஏர்சீப் மார்ஷல் திரு ஏ பி சிங் கூறியுள்ளார்.

இன்று ஹைதராபாதில் விமானப்படை அதிகாரிகளின் பயிற்சி நிறைவு விழாவில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலளிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் மூலம் தீவிரவாத அமைப்புகள் மீது குறிவைத்து துல்லியமாக தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

பாதுகாப்புப் படைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பையும் ஆபரேஷன் சிந்தூர் எடுத்துரைத்ததாக ஏர்சீப் மார்ஷல் திரு ஏ பி சிங் கூறினார்.

>><><><<

தேசிய நுகர்வோர் உதவி மையம் பொதுமக்களின் குறைகளுக்கு உரிய தீர்வுகளை வழங்கி வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

சென்னையில் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான பயிலரங்கில் பேசிய நுகர்வோர் விவகாரங்கள் துறை செயலாளர் திருமதி Nidhi Khare தேசிய நுகர்வோர் உதவி மையம் நடப்பாண்டில் இதுவரை 5 லட்சத்திற்கும் மேற்பட்ட புகார்களை பெற்றுள்ளதாக குறிப்பிட்டார்.

இதில் 25 சதவீதம் தென்மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அளித்த புகார்கள் என்று அவர் தெரிவித்தார்.

கர்நாடகா மற்றும் கேரளா நுகர்வோர் ஆணையங்கள் அதிக எண்ணிக்கையில் புகார்களுக்கு தீர்வு கண்டிருப்பதாகவும் திருமதி Nidhi Khare கூறினார்.

>><><><<

பொது போக்குவரத்தினை மாற்றுத்திறனாளிகள் எளிதாக பயன்படுத்துவதற்கு வகை செய்யும் வரைவு நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிடவுள்ளது.

இதுதொடர்பாக, பொதுமக்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டிற்கான துறை கோரியுள்ளது.

பேருந்து, புறநகர் ரயில், மெட்ரோ ரயில்களை மாற்றுத்திறனாளிகள் எளிதாக பயன்படுத்துவதற்கு ஏதுவாக இந்த நெறிமுறைகளை வகுக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

>><><><<

ஐநா பாதுகாப்புக் குழுவின் அவசர கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இஸ்ரேல் – ஈரான் இடையேயான மோதல் குறித்து இதில் விவாதிக்கப்படவுள்ளது.

சர்வதேச அணுசக்தி முகமையின் அதிகாரிகளும் இதில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, ஈரானின் ஏவுகணைத் தாக்குதலை அமெரிக்காவின் விமானப் பாதுகாப்பு கருவிகளைக் கொண்டு இஸ்ரேல் முறியடித்துள்ளது.

ஈரான் நடத்திய தாக்குதலில் ஒருவர் உயிரிழந்ததாகவும், 20 க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் இஸ்ரேல் அரசு கூறியுள்ளது.

இந்நிலையில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல் காரணமாக 78 பேர் உயிரிழந்ததாகவும், 300-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா அளித்து வரும் ஆதரவு காரணமாக இஸ்ரேல் தங்கள் நாட்டின் மீது தாக்குதல் நடத்தி வருவதாகவும் ஈரான் கூறியுள்ளது.

>><><><<

சிக்கிம் ஆளுநர் திரு ஓம்பிரகாஷ் மாத்தூர், பிரதமர் திரு நரேந்திர மோடியை புதுதில்லியில் சந்தித்துப் பேசினார். சிக்கிம் மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகள் குறித்து பிரதமருடன் ஆலோசனை நடத்தியதாக ஆளுநர் மாளிகை செய்திக் குறிப்பு தெரிவிக்கிறார். திரு ஓம் பிரகாஷ் மாத்தூர், குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜெக்தீப் தன்கர், பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

>><><><<

சர்வதேச யோகா தினம் வரும் 21 ஆம் தேதி கொண்டாடப்படுவதை யொட்டி நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. புதுதில்லியில் யோகா தொடர்பான உலகளாவிய உச்சிமாநாடு தற்போது நடைபெற்று வருகிறது. இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் காணொலி வாயிலாகவும் பங்கேற்றுள்ளனர். யோகா பயிற்சியாளர்கள், ஆய்வாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், சுகாதாரத் துறை நிபுணர்கள் ஆகியோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

தமிழகத்திலும் யோகா தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இதன் ஒருபகுதியாக தூத்துக்குடியில் உள்ள மகளிர் கல்வியியல் கல்லூரி மாணவிகள் யோகாசன நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்தினர். மகளிர் யோகாப் பயிற்சியில் ஈடுபட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டதாக யோகா பயிற்சியாளர் சுகன்யா ராஜவேல் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

>><><><<

பிரான்சுடனான நல்லுறவு தொடர்ந்து அதிகரித்து வருவதாக இந்தியா கூறியுள்ளது. அரசுமுறைப் பயணமாக பிரான்ஸ் சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் Marseilles -ல் நடைபெற்ற

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். ஐரோப்பிய யூனியனுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நடப்பாண்டு இறுதிக்குள் இறுதி செய்யப்படும் என்றும் திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

>><><><<

மத்தியப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களுக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் தேசிய புலனாய்வு அமைப்பினர் இன்று சோதனை நடத்தினர். தடை செய்யப்பட்ட தீவிரவாத அமைப்புக்கு எதிரான வழக்கு தொடர்பாக போபாலில் 3 இடங்களிலும் Jhalawar –ல், 2 இடங்களிலும் இந்த சோதனை நடத்தப்பட்டு வருகிறது

>><><><<

தமிழகத்தில் சுகாதார சீரமைப்புத் திட்டம் 2 ஆயிரத்து 854 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது. முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 5 ஆயிரத்து 878 கோடி ரூபாய் செலவில் 81 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்திருப்பதாக தமிழக அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. மருத்துவத் துறையின் சிறப்பான செயல்பாடுகளுக்கு 545 விருதுகளை தமிழகம் பெற்றுள்ளதாகவும் அந்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>><><><<

மகாராஷ்டிராவில் உணவு பாதுகாப்பு விதிமுறைகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அம்மாநில அரசு எச்சரித்துள்ளது. இதற்காக பல்வேறு ஆய்வுகளை உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாக உணவு மற்றும் மருந்து நிர்வாக ஆணையர் திரு Rajesh Narvekar தெரிவித்துள்ளார். உணவகங்கள், உணவு பாதுகாப்பு நெறிமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார். சைவம் மற்றும் அசைவ உணவுகள் தனித்தனியே தயாரிக்கப்படுவதை உணவகங்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு Rajesh Narvekar கேட்டுக் கொண்டார்.

>><><><<

அமெரிக்காவின் Texas -ல் மழை வெள்ளத்தால் 11 பேர் உயிரிழந்தனர்.

பலரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

டெக்சாஸ் மாகாணத்திற்கு உட்பட்ட San Antonio -வில் பெய்த தொடர் மழை காரணமாக பல்வேறு பகுதிகள் வெள்ள நீரால் சூழப்பட்டுள்ளன.

4 பேரை தேடும் பணி நடைபெற்று வருவதால் உயிரிழப்பு அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

>><><><<

## விளையாட்டுச் செய்திகள்

ஆசிய பாரா படகு சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், 4 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

தாய்லாந்தின் **Rayong**–ல் நடைபெற்ற இப்போட்டியில், **Prachi Yadav** மற்றும் **Pooja Ojha** தங்கப்பதக்கம் வென்றனர்.

**Nisha Rawat, Manish Kaurav, Amit Kumar, Manish Yadav** ஆகியோர் வெள்ளிப்பதக்கத்தையும், **Yash Kumar, Jai Deep, Pooja Garg, Sangeetha Rajput** ஆகியோர் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

-----------

தாய்லாந்து பாரா பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் நவீன் சிவக்குமார் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-19, 10-21, 21-12 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் **Fredy Setiawan**–ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் **Neeraj,** 21-15, 21-15 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் **Coraline Bergeron-** ஐ வென்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றார்.

--------------

**Skopje** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manav Thakkar – Manush Shah** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-----------

மங்கோலியாவில் நடைபெற்ற ஆசிய வாலிபால் லீக் சாம்பியன் போட்டியில் இந்தியா 9வது இடத்தைப் பிடித்தது.

**>> End of News <<**